**Makkal Kural, Coimbatore, November 15, 2009**

## கோவையில் டிசிஎஸ் நடத்திய

# வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா

கோவை,நவ.15:

கோவை ஆர்.எஸ்.புரம் கலையரங்கில் 'டிசிஎஸ் ஐடி விஸ் 2009' வினாடிவினா போட்டி நடைபெறுகிறது.

தகவல் தொழில்நுட்ப சேவை, பிசினஸ் சொல்யூஷன்ஸ் மற்றும் அவுட்சோர்சிங் நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நடத்திய டிசிஎஸ் ஐடி விஸ் போட்டிக்கு மாணவர்கள் மத்தியில் ஒட்டுமொத்த வரவேற்பு கிடைத்தது. கோயமுத்தூர் ஆர்.எஸ்.புரம் திருவேங்கடசாமி சாலையில் உள்ள மாநகராட்சி கலைரங்கத்தில் முதன்முறையாக நடத்தப்பட்ட டிசிஎஸ் ஐடி விஸ் கோயம்புத்தூர் எடிஷன் போட்டியில் கோயம்புத்தூர், திருப்பூர், பொள்ளாச்சி, சத்தியமங்கலம், ஈரோடு, உடுமலைப் பேட்டை, மேட்டுப்பாளையம், ஊட்டி, கோத்தகிரியைச் சேர்ந்த 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இரண்டு வெளியேற்றுச் சுற்றுக்கள் மூலம் 6 டீம்கள் இறுதி செய்யப்பட்டன.

விழாவில் சந்திரா குரூப் ஆப் கம்பெனிஸ் நிர்வாக இயக்குனர் நந்தினி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். டிசிஎஸ் துணை தலைவர் மற்றும் தலைமை இயக்குனருமான ரவி விஸ்வநாதன் டிசிஸெ் குளோபல் அலையன்ஸ் ஹெட்டும், துணைத் தலைவருமான ஜெயராம கிருஷ்ணனனும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் போது ரவி விஸ்வநாதன் கடந்து செல்லும் ஒவ்வொரு ஆண்டிலும் இந்த நிகழ்ச்சி உத்வேகத்தை பெறுகிறது. இன்று இந்த இளைஞர்களின் தொழில் நுட்ப நுண்ணறிவை பார்க்கையில் எதற்காக டிசிஎஸ் ஐடி விஸ் நிகழ்ச்சி ஆர்வமிக்க போட்டியாக விளங்குகின்றது என்பது விளங்குகிறது.